விக்கல ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

கடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஐப்பசி 22 வியாழக்கிழமை (07-11-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 264

யாழ்ப்பாணம் நிறுவர் நூலகம்.

# புலிகளோடு பேச வேண்டும் என்பதில் அரசு - எதிர்க்கட்சிகள் இணக்கம்!

## மூன்றாம் தரப்பு தொடர்பாளராக இருக்கலாம் என்ற புதிய நிலை

கொழும்பு, நவம்பர் 7

சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் பொருட்டு, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்பதில்—

அரசாங்க மற்றும் எதிர்க்கட்சிகள் மத்தியில் கருத்திணக்கம் உருவாகி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது;

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவையற்றது என்றும் —

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் மூன்றாம் தரப்புத் தொடர்பாளர் பங்கே அவசியம் என்றும்— அரச, எதிர்க்கட்சி எம். பிக்கள் 23 பேர் விடுத்த அறிக்கையில் புதிய நிலைப்பாடு ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

இன்ரநாஷனல் அலேற் அமைப்பும் இலங்கைச் சமாதானப்பேரவையும் இணைந்து கடந்த மாதத்தில் வடஅயர்லாந்தில் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது.

இலங்கையில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து சமாதானத்தை உருவாக்குவதற்கான வழி முறைகளை ஆராய்வதே இந்தக் கருத்தரங்கின் பிரதான நோக்கமாக இருந்தது.

அரசாங்கக் கட்சி (பொ. ஐ. மு.) முஸ்லிம் காங்கிரஸ், எதிர்க்கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, தமிழர் விடுதலைக்கூட்டணி, இ. தொ. கா., ஈ. பி. டி. பி., புளொட், ஸ்ரீலங்கா முன்னேற்ற முன்னணி (ஜே. வி. பிக்கு ஆதரவானது) ஆகியவற்றைச் சேர்ந்த 23 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதில் கலந்து கொண்டனர்.

அவர்கள் 23 பேரும் கடந்த வாரம் விடுத்த அறிக்கையில் பின்வரும் விடயங்களில் தமக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவு திரட்டுகிறது

கொழும்பு, நவ. 7

இனப் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என்று வடஅயர்லாந்துக் கருத்தரங்கில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கு —

மேலும் பெரும் எண்ணிக்கையான எம். பிக்களின் ஆதரவைத்திரட்டும் முயற்சியில் தமிழர் விடுதலைக் கூட்டணி இப்போது தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

பொதுசன ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசியக்கட்சி ஆகிய கட்சிகளின் எம். பிக்களை — வட அயர்லாந்து செல்லாத எம், பிக்களை — தனிப்பட்ட முறையில், சந்தித்து ஆதரவு திரட்டவும் கூட்டணி உத்தேசித்துள்ளதாகவும் சொல்லப்படுகிறது.

(அ-3)

## இலங்கை மனித உரிமை மீறல் குறித்து பிரிட்டிஷ் பிரபுக்கள் சபையில் முறையீடு

கொழும்பு, நவ. 7

இலங்கையில் நடைபெறுவதாகக் கூறப்படும் அடிப்படை மனித உரிமை மீறல்கள் குறித்து பிரிட்டிஷ் பிரபுக்கள் சபையில் உள்ள மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் அவுஸ்ரரி பிரபுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டை அம்பாந்தோட்டை ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி எம்.பியான நிஹால் கலபதி செய்துள்ளார்.

நிஹால் கலபதி அண்மையில் வட அயர்லாந்தின் வெல்பாஸ்ட் நகரில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் கலந்து கொண்டார்.

அவர் நாடு திரும்பும் வழியிலேயே இந்த முறைப்பாட்டைச் செய்திருந்தார்.

(இ-3)

## கடவுச்சீட்டு, தபால்கட்டணம் உயர்வு அரச ஊழியருக்கு சம்பள அதிகரிப்பு

### அரசின் 3 ஆவது வரவு செலவுத் திட்டத்தில் அறிவிப்பு

கொழும்பு, நவ 7

நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் மூன்றாவது வரவு செலவுத் திட்டத்தில் கடவுச் சீட்டு, தபால் கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளன. அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்புக் குறித்தும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரே நாளில் விநியோகிக்கப்படும் அனைத்து நாடுகளுக்கான கடவுச் சீட்டுக் கட்டணம் 2 ஆயிரத்து 500 ரூபாவில் இருந்து 3 ஆயிரத்து 500 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

சாதாரண கடவுச் சீட்டுக்கான கட்டணம் ஆயிரத்து 500 ரூபாவிலிருந்து ஆயிரத்து 750 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது

மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்வதற்கான கடவுச் சீட்டுக் கட்டணத்தில் அதிகரிப்பு எதுவும் இல்லை.

[illegible] வருடாந்த கட்டணம் 5 ஆயி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கிளின்ரன் வெற்றி!

வாஷிங்டன், நவ. 7

அமெரிக்க ஜனாதிபதத்தேர்தலில் பில் கிளின்ரன் வெற்றி பெற்றுள்ளார்.

இதுவரை 90 வீதமான வாக்குகள் எண்ணப்பட்டுள்ள நிலையில் கிளின்ரன் 50 சத வீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று தேர்தலில் வெற்றி பெற்றுள்ளார்.

கிளின்ரனின் வெற்றியை அடுத்து குடியரசுக் கட்சிவேட்பாளர் பொப்டோல் தொலைபேசி மூலம் தனது வாழ்த்துக்களை கிளின்ரனுக்குத் தெரிவித்தார்.

அளிக்கப்பட்ட வாக்குகளில் கிளின்ரன் 50 சத வீத வாக்குகளையும் —

பொப் டோல் 40 சத வீத வாக்குகளையும் —

மூன்றாவது வேட்பாளர் றொஸ் பெரே 7 சதவீத வாக்குகளையும் — பெற்றனர்.

சுமார் 50 ஆண்டுகளுக்குப் பின்னர் இரண்டாவது முறையும் தெரிவு செய்யப்பட்ட ஜனநாயகக்கட்சி வேட்பாளர் என்ற பெருமையை கிளின்ரன் பெறுகிறார்.



வெள்ளை மாளிகைக்குள் நுழைவதற்கான போட்டியில் அமெரிக்க வாக்காளர்கள் ஜனநாயகக்கட்சியைத் தெரிவு செய்த போதிலும் நாடாளுமன்றமான காங்கிரஸுக்கு குடியரசு அங்கத்தவர்களையே தெரிவு செய்துள்ளனர்.

(இ-10)

## நரசிம்மராவுக்கு ரூ.1லட்சம் பிணை

லகுபாய் பதக் மோசடி வழக்கில் முன்னாள் இந்தியப் பிரதமர் பி. வி நரசிம்மராவுக்கு டில்லி நீதிமன்றம் நேற்று பிணை வழங்கியது.

நரசிம்மராவுக்கு ஒரு லட்சம் ரூபா சொந்தப் பிணையும் —

அதற்கு ஈடான தொகைக்கு உத்தரவாதப் பிணையும் அளிக்கப்பட்டது.

நரசிம்மராவுடன் இந்த வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள சந்திரசுவாமி மற்றும் அகர்வால் ஆகியோர் தொடர்ந்தும் நீதிமன்றக் காவலிலேயே வைக்கப்படுவார்கள் என்று நீதிபதி உத்தரவிட்டார்.

இவர்கள் இருவரின் பிணை மனுக்கள் உயர் நீதிமன்றத்தின் விசாரணையில் உள்ளன.

நேற்றுக் காலை சுமார் 4 மணி நேரம் நடந்த வழக்கறிஞர்கள் வாதத்துக்குப் பின்னர் ராவின் பிணை மனு மீது நீதிபதி தனது உத்தரவைப் பிறப்பித்தார்.

முன்னதாக நரசிம்மராவ் மீதான குற்றச்சாட்டுக்கள் நீதிமன்றத்தில் வாசிக்கப்பட்டன.

சதி செய்ததாகவும், ஏமாற்றியதாகவும் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

இந்த வழக்கில் தாம் குற்றமற்றவர் எனக் கூறி நரசிம்மராவ் குற்றச்சாட்டை எதிர்த்து வழக்காடப் போவதாக அறிவித்தார்.

அவருக்கு முன்னதாக சந்திரசுவாமி மற்றும் அகர்வால்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் தாக்கு

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள தட்டுவான் கொட்டி என்னும் இடத்தில் புலிகள் மீது படையினர் மேற்கொண்ட தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டார் என்றும் ரி-56 ரக துப்பாக்கி ஒன்றும் அடையாளப் பட்டி, சைனைட் வில்லை என்பனவும் கண்டெடுக்கப்பட்டன என்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தெரிவித்தது.

நேற்று முன்தினம் பகல் 12.45மணியளவில் இந்த சம்பவம் இடம் பெற்றது என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி
## பழைய மாணவர் சங்கம்

புதிய அதிபர்
**திரு. N. சிவகடாட்சம்**
(B. Sc. Dip - in - Education)
அவர்களை வரவேற்றல்

தலைவர்: திரு. V. சோமசுந்தரம் B. A.
(சங்க உப தலைவர்)
இடம்: கல்லூரி மண்டபம்
காலம்: **9-11-96** பி. ப. 2மணி (சனிக்கிழமை)
அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

S. K. தங்கவடிவேல்
செயலாளர்
(43546)


# மரண அறிவித்தல்கள்

## காசிப்பிள்ளை காலிங்கராசா

இணுவில் கிழக்கு அங்களப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட காசிப்பிள்ளை காலிங்கராசா 30-10-96 அன்று வவுனியாவில் காலமானார்.

இவர் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், புவனேஸ்வரி, உலகநாதன், கருணைநாதன், ஞானசௌந்தரி, சிறிலங்கநாதன் (சுவிஸ்), சகலகலாவாணி, அகிலாண்டநாயகி (சுவிஸ்), காசிநாதன் (சுவிஸ்), அருள்நாதன் (சுவிஸ்), இராஜமனோகரி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற தம்பித்துரையின் அன்புச் சகோதரரும், மகேஸ்வரன் (சுவிஸ்), சரசுவதி, விக்கினேஸ்வரன், சிவகுமார் (அண்ணா தொழிலகம்) ஆகியோரின் மைத்துனரும், கனகசபை (அச்சுவேலி ப.நோ.கூ. சங்கம்), அருந்தவராணி, மலர்மாலை, சந்திரன் (சுவிஸ்), சந்திராதேவி (சுவிஸ்), ரஞ்சன், விஜியகுமார் (சுவிஸ்), சுதா (சுவிஸ்), சிவகலா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், தர்சினி, சுதன், கமலதாசன் (கனடா), சூட்டி, ராஜி, ராஜீவ், கஜேந்திரன், விஜிதா, கவிதா (சுவிஸ்), சயந்தன், நிரோசன், இன்பதாஸ், நிசாந்தன், சிந்துஜா (சுவிஸ்), சுகன்ஜா (சுவிஸ்), சரண்ஜா (சுவிஸ்), பிரிந்தாவன் (சுவிஸ்), பிரியங்கன் (சுவிஸ்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வவுனியாவில் 30-10-96 அன்று நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்;
கா. கருணைநாதன் (சின்னக்கிளி)
(மகன்)
அங்களப்பாய்,
இணுவில் கிழக்கு.
(43543)

## சின்னராசா குமரதாஸ்

B. Sc. (Hons). CEY.

இல. 654/4, கே. கே. எஸ். வீதி நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சின்னராசா குமரதாஸ் 05 - 11 - 96 அன்று மல்லாவியில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சின்னராசா (உரிமையாளர் யாழ். ராஜா கிறீம் ஹவுஸ்), சரஸ்வதி ஆகியோரின் அன்பு மகனும், மகேசன் (ராஜா கிறீம் ஹவுஸ், நீர்கொழும்பு), கமலாதேவி (இந்தியா), ஜெயலக்ஷ்மி (மல்லாவி), சத்தியமூர்த்தி (லண்டன்), சண்முகானந்தன் (உரிமையாளர் யாழ். ராஜா கிறீம் ஹவுஸ்), சத்தியசீலன் (லண்டன்), சத்தியலட்சுமி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜெகதீஸ்வரி (நீர்கொழும்பு), சாந்தகுமார் (பொறியியலாளர் - இந்தியா), சிவபாதசுந்தரம் (மல்லாவி), அன்னபூரணி (லண்டன்), கலையரசி, சிவகுமார் (டாக்டர் - லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 07-11-96 இல் மல்லாவியில் நடைபெறும்.

தகவல்:
சி. சண்முகானந்தன்
(சகோதரர், ராஜா கிறீம் ஹவுஸ்)
(43531)

## சண்முகம் கணேசு (சாமியார்)

இணுவில் தெற்கு நடுவிளாத்தி ஸ்ரீ ஞானவைரவர் ஆலயப் பூசகரும், முகாமையாளருமாகிய சண்முகம் - கணேசு (சாமியார்) அவர்கள் 5-11-96 இல் சிவபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும், கந்தசாமி, பத்மநாதன் (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திராதேவி, யசிந்தா (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமனாரும், தனுஷியாவின் (இத்தாலி) பேரனும், சண்முகம் - முத்துலிங்கம் (உடுவில் கிராமசபை முன்னாள் தலைவர், சமாதான நீதிவான்) செல்லப்பா - பூமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கணபதிப்பிள்ளை மயில்வாகனம், சந்திரசேகரம்பிள்ளை - இரத்தினம், கார்த்திகேசு - ஆறுமுகம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், நாகலிங்கம் - தம்பிராசா, நாகலிங்கம் - சுந்தரலிங்கம் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 6-11-96 புதன்கிழமை தாவடி இந்து மயானத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
கணேசு - கந்தசாமி
(மகன்)
இணுவில் தெற்கு,
இணுவில்.
(43534)

# யாழ். மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்யும் சூழ்நிலை வேண்டும்

## ஜனாதிபதிக்கு அதிபர்கள் மகஜர்

யாழ்ப்பாணம், நவ, 7

மாணவி கிருஷாந்தி, மாணவன், பிரணவன், உப அதிபர் இராசம்மா குமாரசாமி, ஆயலவர் கிருபாமூர்த்தி ஆகியோரின் படுகொலைகளைக் கண்டித்து—

யாழ்ப்பாணம், நல்லூர் கல்விக் கோட்டங்களில் உள்ள பாடசாலை அதிபர்களின் சார்பில்—

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு மகஜர் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

இந்தப் படுகொலைகள் பொதுமக்கள் மத்தியில், குறிப்பாகப் பெற்றோர்கள் மத்தியில், இளவயதினரதும், வயதானவர்களினதும் பாதுகாப்புக் குறித்து அச்ச உணர்வை உருவாக்கியுள்ளன—

இந்தக் கொடுமையான செயலைக் கண்டிப்பதுடன், பிரஜைகளின் பாதுகாப்பு உறுதி செய்யப்படக் கூடிய சூழ்நிலையை உருவாக்குமாறும் உங்களிடம் கேட்டுக் கொள்கிறோம்— என்று அந்த மகஜரில் கோரப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 28ஆம் திகதியிடப்பட்ட இந்த மகஜரில் யாழ்ப்பாணம், நல்லூர் கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகளின் அதிபர்களின் சார்பில்—அவர்களின் பிரதி நிதிகளாக — ஏழு அதிபர்கள் ஒப்பமிட்டுள்ளனர்.

ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜரின் பிரதி கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரானாவுக்கும் அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ)

## சைவநெறி தேர்வு

யாழ்ப்பாணம், நவ. 7

யாழ். சைவபரிபாலன சபையாரால் ஆண்டு 11க்கான சைவநெறித் தேர்வு எதிர்வரும் 17 ஆம் திகதி காலை 9 மணிக்கு நடைபெறும்,

72 பரீட்சை நிலையங்களில் நடைபெறும் இத்தேர்வில் 4 ஆயிரம் மாணவர்கள் தோற்றவிருக்கிறார்கள்,

பிரவேசப்பத்திரமும் சுட்டிலக்கமும் பரீட்சை நடைபெறும் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

(இ-3)

## கூட்டுறவுச் சங்கம் மூலம் கோழித் தீன் விநியோகம்

வலி தென்மேற்கு, நவ. 6

வலி, தென், மேற்குப் பகுதி கூட்டுறவுச்சங்கங்கள் கோழித்தீனை கொள்வனவு செய்து விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றன.

வலி, தென், மேற்குப் பகுதிகளில் கோழித் தீனுக்கு பெரும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இப்பகுதி தனியார் கடைகளில் தரமற்ற, சுத்தமற்ற கோழித்தீன் அதிக விலைக்கு விற்பனைசெய்யப்படுவதனால் பண்ணையாளர்கள் பெரும் கஷ்டத்துக்கு உள்ளாகின்றனர்.

இதை தவிர்க்கும் நோக்குடன் கூட்டுறவுச் சங்கங்கள் கோழித்தீனை எடுத்து விநியோகிப்பதற்கு முயற்சிமேற்கொண்டுள்ளது. (இ-145)

## வலி வடக்கு விசேட அடையாள அட்டைகள்

யாழ்ப்பாணம், நவ. 7

வலி - வடக்கு பிரதேச செயலர் பிரிவில் விசேட அடையாள அட்டைகள் பிரதி திங்கள் தோறும் பொதுமக்களுக்கும், பிரதி வெள்ளி தோறும் பாடசாலை மாணவர்களுக்கும் வழங்கப்படும் என்று வலி - வடக்கு பதில் பிரதேச செயலர் என். வேதநாயகன் தெரிவித்தார்.

(இ-2)

## சுவாமி விவேகானந்தர் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ. 7

சுவாமி விவேகானந்தரின் யாழ்ப்பாண விஜயத்தின் நூற்றாண்டையொட்டிய முன்னோடிக் கருத்தரங்கும், விழாவும் இன்று காலை 10 மணிக்கு யாழ் வைத்தீஸ்வராக்கல்லூரியில் நடைபெறவிருக்கின்றன.

திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயத்தின் ஆதரவுடன் வைத்தீஸ்வராக் கல்லூரி இந்து மாணவர் மன்றம் ஏற்பாடு செய்துள்ள இந்த வைபவத்திற்கு யாழ். மேலதிக அரச அதிபர் சு. வைத்திலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(இ - 3)


## பிரத்தியேக வகுப்புகள்

25, றக்கா வீதி,
யாழ்ப்பாணம்.
SPOKEN ENGLISH
with
GRAMMAR
By **BRITTO**
ஆரம்பம்: 8–11–96
பி. ப. 4. 15 (வெள்ளி)
(43548)



## புதிய உயர் கல்லூரி

யாழ்.

**A/L 96, 97, 98**
கணக்கியல்
கொலின்ஸ்.
ஆரம்பம்: [illegible] 11 - 96
(43537)


# மரண அறிவித்தல்கள்

திருமதி
## தில்லைவாசகர் இராஜேஸ்வரி

(இராசு)

வர்த்தலைவிளான் தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும், நல்லூர் புதிய செம்மணி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தில்லைவாசகர் இராஜேஸ்வரி 6-11-96 இல் காலமாகிவிட்டார்.

இவர் தில்லைவாசகரின் அன்பு மனைவியும், ரமேஸ்கண்ணா, தவதர்சினி, பிரியதர்சினி, [யா/ செங்குந்த இந்துக்கல்லூரி மாணவர்கள்], ராஜீவ்குமார் [யாழ். ஞானோதய வித்தியாலய மாணவன்], ஜெயதாரணி [யாழ். காசிப்பிள்ளை வித்தியாலய மாணவி] ஆகியோரின் அன்புத் தாயாரும், வர்த்தலைவிளான் இராஜரட்ணம் - பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற நாகேசு மற்றும் பூரணம் ஆகியோரின் அன்பு மருமகளும், புஸ்பகுமாரி [கனடா], சிவகுமார், செல்வகுமார் [ஜேர்மனி], கணபதிப்பிள்ளை, பரமேஸ்வரி, சரோஜினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், நவரட்ணம் [கனடா], மோகனாம்பிகை, மனோன்மணி, தவராஜா, தங்கராஜா [பேபி] ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [7 - 11 - 96] காலை 10.00 மணியளவில் புதுச் செம்மணி வீதியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:
நா. தில்லைவாசகர்
(கணவன்)
புதுச்செம்மணி வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.
(43533)

## மோசஸ் யேசுதாசன்

(இளைப்பாறிய அரச நில அளவையாளர்

மல்லாகம் புதுமைமாதா ஆலயத்தைச் சேர்ந்தவரும், சுன்னாகத்தில் வசித்தவருமான திரு. மோசஸ் யேசுதாசன் (இளைப்பாறிய அரச நில அளவையாளர்) அமலனடி எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மோசஸ்—இராசம்மா தம்பதிகளின் மகனும், ஞானமணியின் அன்புக் கணவரும், கில்டா ஜெயமலர், மல்லில்டா ஞானமலர் ஆகியோரின் அருமைத் தந்தையாரும் திரு திருமதி த. அருளப்புவின் மருமகனும், செபமாலை, அமரர் அருட்பிரகாசம், ஜெபமணி ஆகியோரின் சகோதரரும், மரியதாஸ் [ஜேர்மனி], தேவதாஸ் [ஆஸ்திரேலியா] ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல. 20 டேவிற்றோட் யாழ்ப்பாண இல்லத்தில் இருந்து இன்று [07-11-96] வியாழக்கிழமை காலை 9 மணிக்கு மரியன்னை பேராலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி நடைபெற்று நல்லடக்கத்துக்காக புனித-கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்
செ. செக்ஸ்ரஸ்
இல. 20, டேவிட் றோட்,
யாழ்ப்பாணம்.
[43523]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமரிடம் வழங்கிய அதிகாரங்களை
# மீண்டும் பொறுப்பேற்றார் யெல்ஸின்

## குணமடைந்து விட்டதாக அறிவிப்பு

மொஸ்கோ, நவ. 7
ரஷ்ய ஜனாதிபதி பொறிஸ் யெல்ஸின் இருதய அறுவைச் சிகிச்சையின் பின்னர் துரிதமாகக் குணமடைந்து வருகிறார்.

அறுவைச் சிகிச்சை நடந்து 48 மணி நேரத்துக்குள் பிரதமர் விக்ரர்செனமைடினிடம் இருந்து மீண்டும் தமது அதிகாரங்களைப் பொறுப்பேற்றுக்கொண்டு அதற்கான பிரகடனத்திலும் யெல்ஸின் கையெழுத்திட்டார்.

இருதய அறுவைச் சிகிச்சைக்கு முன்னர், தமது அதிகாரங்களை பிரதமரிடம் கையளிக்கும் பிரகடனத்தில் யெல்ஸின் கையெழுத்திட்டது தெரிந்ததே.

7 மணிநேரம் நடைபெற்ற அறுவைச் சிகிச்சை பூரண வெற்றி என்று தெரிவிக்கப்படுகிறது

அறுவைச் சிகிச்சை நடத்திய வைத்திய நிபுணர் குழுவுக்கு ஆலோசனை தெரிவிக்க நியமிக்கப்பட்ட குழுவின் தலைவர் 88 வயது நிரம்பிய ஒரு பிரபல வைத்திய நிபுணர் என்றும் —

அவர் ஏற்கனவே இது போன்ற 66ஆயிரம் அறுவைச் சிகிச்சைகளைச் செய்தவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அறுவைச் சிகிச்சைக்குப் பின் யெல்ஸினை மருத்துவ மனைக்குச் சென்று பார்த்த ரஷ்ய பிரதமர் விக்ரர்செனமைடின் அமெரிக்க அதிபர் பில் கிளின்ரனுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டார். யெல்ஸினுக்கு அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக நடைபெற்றது என அவர் அமெரிக்க ஜனாதிபதிக்குத் தெரிவித்தார்.

(இ-10)

### பீஹார் கால்நடைத் தீவன ஊழல்:

## மேல் நீதிமன்றத் தீர்ப்பை உயர் நீதிமன்று நிராகரிப்பு

புதுடில்லி, நவ. 7
பீஹார் மாநிலத்தில் கால்நடைத் தீவன ஊழல் விசாரணையில் சி. பி. ஐ இயக்குநர் குறுக்கிடுகிறார் என்ற சந்தேகத்தின் பேரில் இத்தகைய விசாரணைக்கு அவர் தலைமை வகிக்கக் கூடாது எனக் கோரும் பட்னா மேல் நீதிமன்றத்தின் உத்தரவின் ஒரு பகுதியை நேற்று உயர் நீதிமன்றம் நிராகரித்தது.

சி. பி. ஐ. இயக்குநர் இந்த ஊழல் விசாரணையை மேற்கொள்வதற்கு முழுமையாகப் பொறுப்பேற்க வேண்டும் என்பதே பொருத்தமானதும் தேவையானதுமாகும் என உயர் நீதி மன்றம் தெரிவித்துள்ளது.

(இ-10)

## மேற்கு .வங்காளத்தில் மீண்டும் கூர்க்கா பிரச்சினை

### ஜோதிபாசு மாநாடு கூட்டுகிறார்

மேற்கு வங்காளத்தில் மீண்டும் எழுந்துள்ள கூர்க்கா பிரச்சினை குறித்து விவாதிக்க மேற்கு வங்க அரசு அனைத்துக் கட்சிக் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது.

மாநில அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கு வங்க முதலமைச்சர் ஜோதிபாசு இந்தத் தகவலைத் தெரிவித்தார்

கூர்க்கா தேசிய விடுதலை முன்னணி (ஜி.என்.எல்.எவ்) தனி மாநிலத்துக்காகப் புதிதாகக் கோரிக்கை விடுத்துள்ளதை அடுத்து டார்ஜிலிங் மலைப்பகுதியில் உள்ள நிலைமையை மாநில அமைச்சரவை விரிவாக ஆராய்ந்தது.

(இ-10)

# சகல சட்ட வழிகளாலும் எதிர்த்துப் போராடுவேன்

## பதவி இழந்த பெனாஸிர் அறிவிப்பு

இஸ்லாமாபாத் நவ. 7
தாம் பதவி நீக்கப்பட்டதற்கு எதிராக சகல சட்ட வழிகளிலும் போராடப் போவதாக பெனாஸிர் பூட்டோ தெரிவித்தார்.

பெனாஸிர் பூட்டோவும் அவரது அமைச்சரவைச் சகாக்களும் பதிவியில் இருந்து நீக்கப்பட்டது முதல் தகவல் தொடர்புகள் துண்டிக்கப்பட்ட நிலையில் இருந்து வருகின்றனர்.

பெனாஸிர் பூட்டோவின் கணவர் ஆஷில் அலி சர்தாரி லாகூரில் உள்ள பண்ணை இல்லத்தில் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

முக்கியமான அரசாங்க நிறுவனங்கள் அனைத்தையும் துருப்புக்கள் காவல் காத்து வருகின்றன.

தாம் பதவியில் இருந்து நீக்கப்பட்டதை எதிர்த்து நீதிமன்றம் ஒன்றில் வழக்கு தொடருவதென பெனாஸிர் பூட்டோ முடிவு செய்திருப்பதாக அவரது ஆலோசகர் ஒருவர் தெரிவித்ததாக ஏஜென்ஸி செய்திகள் கூறுகின்றன,

(இ-3)

## பெனாஸிர் நீக்கத்துக்கு இம்ரான் கான் ஆதரவு

இஸ்லாமாபாத். நவ. 7
பாகிஸ்தானில் நீதி இயக்கம் என்ற கட்சியை அமைத்து நடத்தி வரும் முன்னாள் கிரிக்கெட் வீரரும், தற்போது செல்வாக்கு மிகுந்த அரசியல்வாதியாக விளங்குபவருமான இம்ரான் கான் பிரதமர் பெனாஸிர் பூட்டோவைப் பதவி நீக்கம் செய்ய ஜனாதிபதி லெஹாரி எடுத்த தீர்மானம் முற்றிலும் பொருத்தமானது எனத் தெரிவித்துள்ளார்.

(இ-10)

# நடமாடும் ஈராக்கிய ஏவுகணை மீது அமெரிக்கா விமானத் தாக்குதல்

பக்தாத் நவ. 7
தரையிலிருந்து விண்ணை நோக்கிச் செல்லக் கூடிய நடமாடும் ஈராக்கிய ஏவுகணை, மீது 'ராடார்'எதிர்ப்பு ஏவுகணைத் தாக்குதலை அமெரிக்காவின் எப். 16 ரகப் போர். விமானம் தொடுத்திருக்கிறது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் இத் தருணத்தில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தெற்கு ஈராக்கில் விமானங்கள் பறப்பதற்குத் தடை விதிக்கப்பட்ட வான் பரப்பில் ரோந்துப் பணியில் ஈடுபட்ட அமெரிக்கப் போர் விமானம் ஈராக்கிய ஏவுகணைகளால்தாக்கப்படும் என்பதற்கான அறிகுறிகள் இருந்தன என அமெரிக்கப் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆனால் ஈராக் இந்தத் தகவலை மறுத்துள்ளது.

(இ-3-10)

**உலக அரங்கில்**

# அரசின் ஆட்சிக்காலம் முடியும்வரை இனப்பிரச்சினை தீர்வு இழுபடலாம்!

வடக்கு, கிழக்கு யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிரானது அல்ல தமிழீழ விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்துக்கு எதிரானது என்று அரசாங்கத் தரப்பில் திரும்பத் திரும்பக் கூறப்பட்டு வருகிறது.

எவரோடு யுத்தம் நடக்கிறதோ அவர்களை விட அப்பாவித் தமிழ்ப்பொதுமக்கள் தான் யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகிறார்கள்.

பொதுமக்களுக்கு உயிர் இழப்பு. பொருள் அழிவு. இடம்பெயர்வு, அவலம் நிறைந்த அகதி வாழ்வு.

*அரசின் கடமை*

பொதுமக்களின் நல்வாழ்வுக்கு வழி செய்ய வேண்டியது எந்த ஓர் அரசாங்கத்தினதும் தலையாய கடமை

யுத்தம் பொதுமக்களின் நல்வாழ்வை நாசமாக்கும் என்று தெரிந்தும் இங்கே யுத்தம் தொடர்ந்து நடத்தப்படுகிறது.

தமிழ் மக்களின் அவலங்களும் தொடர்கின்றன,

சமாதானத்துக்காகவே சண்டை என்றும் அரசாங்கத் தரப்பில் காரணம் கூறப்படுகிறது.

சண்டை, சச்சரவைத் தான் வளர்க்கும். சமாதானத்தை ஒருபோதும் கொண்டுவராது.

அதை இன்று கண்கூடாகக் காண்கிறோம். இலங்கையில் மட்டும் அல்ல, உலகெங்கும் தான்.

*யுத்தத்தின் நோக்கம்*

இந்தக் குட்டி நாட்டுக்குக் கட்டுப்படியாகாத அளவு பெருந்தொகைப் பணச் செலவில் மேற்கொள்ளப்பட்டு வரும் வடக்கு, கிழக்கு யுத்தத்தின் நோக்கம் பற்றி அரசாங்கத் தரப்பில் மேலும் சில விவரங்கள் தெரிவிக்கப் படுகின்றன.

தமிழீழ விடுதலைப்புலிகள் நாட்டைப் பிரிக்க முனைபவர்கள். அவர்கள் சமாதானத்துக்கு வரமாட்டார்கள் அவர்களுக்குத் தெரிந்தது எல்லாம் துப்பாக்கிக் கலாசாரம்தான்.

அவர்களின் பாணியிலே அவர்களை அணுக வேண்டும். அவர்களை முற்றாக அழித்து ஒழிப்பதுதான் யுத்தத்தின் நோக்கம்.

தமிழீழ விடுதலைப் புலிகளை முற்றாக அழிக்க முடியாது போனால் அவர்களின் முதுகை முறித்து அவர்களைப் பலவீனப்படுத்தி வேறு வழி இன்றி இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வரச் செய்யவேண்டும். அது சாத்தியமாகும் வரை யுத்தம் ஓயாது. தொடர்ந்து நடைபெறும்.

இப்படி ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்கள் அரசாங்கத் தரப்பில் தெரிவிக்கப் படுகின்றன.

> கொழும்பிலிருந்து வெளியாகும் "சூடாமணி" சஞ்சிகையில் "இனப்பிரச்சினைக்குத் தீர்வு: இழுத்தடிக்கும் உண்மையான குற்றவாளி யார்?" என்ற தலைப்பில் "காண்டீபம்" எழுதிய அரசியல் கட்டுரை இங்கு மறு பிரசுரஞ் செய்யப்படுகிறது.

நாட்டைப் பிரிக்க முனைபவர்கள், சமாதானத்துக்கு எதிரானவர்கள் புலிகள் என்று கூறி அவர்களை யுத்தத்தில் அழித்து ஒழிக்க வேண்டும் என்பது அரசின் ஒரு நிலைப்பாடு.

அதைவிட யுத்தத்தில் புலிகளின் முதுகை முறித்து, அவர்களைப் பலவீனப்படுத்தி சமாதானப் பேச்சுக்கு வரச் செய்வதும் இன்னொரு நிலைப்பாடாக முன்வைக்கப் பட்டிருக்கிறது.

*மூன்று சட்ட நடவடிக்கைகள்*

இதில் அர்த்தம் உண்டா?

சமாதானத்துக்கு எதிரானவர்கள் புலிகள் என்றால் அவர்களைப் பலவீனப்படுத்தி பேச்சுவார்த்தைக்கு வரச் செய்து என்ன பயன்?

புலி பசித்தாலும் புல்லைத் தின்பதில்லை தமிழீழ விடுதலைப் புலிகள் வேறு விதம் என்று அரசாங்கம் எண்ணுகிறதோ!

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு மூன்று கட்ட நடவடிக்கையை அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது

★ முதற் கட்டம்: இராணுவ நடவடிக்கை. அதாவது யுத்தம்.

★ இரண்டாம் கட்டம்: அரசியல் தீர்வு முயற்சி.

★ மூன்றாம் கட்டம்: அபிவிருத்திப் பணிகள்.

அரசாங்கம் பதவிக்கு வந்து இரண்டு வருடங்களுக்கு மேலாகி விட்டது இன்னும் முதற்கட்ட நடவடிக்கையே முடியவில்லை.

யாழ் குடாநாட்டையும், கிளிநொச்சி நகரப் பகுதியையும் பாதுகாப்புப் படைகள் கைப்பற்றித் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்து விட்டன என்று கூறப்படுகிறது.

ஆயினும் அங்கே புலிகளின் கெரில்லாத் தாக்குதல்கள் அடிக்கடி நடக்கின்றன. கிழக்கிலும் அவர்கள் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தி வருகிறார்கள்.

இரண்டாவது கட்டத்துக்கான ஆரம்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தீர்வுத்திட்ட ஆலோசனைகள் அடங்கிய சட்ட ஆவணத்தை அரசமைப்பு விவகார நாடாளுமன்றத் தெரிவுக்குழு மாதக் கணக்காகப் பரிசீலனை செய்து வருகிறது.

*எதிர்ப்பு*

முக்கியமான ஆலோசனைகளுக்கு அரசாங்கக் கட்சிக்குள் எதிர்ப்பு.

பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி எதிர்ப்பு.

பௌத்த குருமாரைக் கொண்ட மகாசங்கத்தின் பெரும் பகுதியினர் எதிர்ப்பு.

சிங்களத் தீவிரவாதிகளும், பேரினவாதிகளும் எதிர்ப்பு.

தமிழ்க்கட்சிகளும் எதிர்ப்பு.

இவ்வளவு எதிர்ப்புக்கும் மத்தியில் தீர்வுத்திட்டம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு வங்கு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுப் பின்னர் சர்வஜன வாக்கெடுப்பில் மக்களின் அங்கீகாரத்தைப் பெற்று ஒப்பேறும் என்ற நம்பிக்கை எப்பொழுதோ செத்து விட்டது.

நடக்கும் காரியங்களைப் பார்த்தால் அரசு விரும்புவதும் அதுதான் என்று எண்ணத் தோன்றுகிறது.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் புலிகளின் பங்களிப்பு அவசியம். அவர்களின் ஒத்துழைப்பு இல்லாமல் எந்த ஒரு தீர்வையும் வடக்கு, கிழக்கில் நடைமுறைப்படுத்த முடியாது. எனவே அரசாங்கம் யுத்தத்தை நிறுத்தி புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் மற்றும் சிலரும் வற்புறுத்தி வருகிறார்கள்.

*மூன்று நிபந்தனைகள்*

புலிகளோடு பேசிப் பயன் இல்லை என்பது அரசாங்கத்தின் கருத்தாக இருந்த போதிலும் பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று அரசாங்கம் அறிவித்தது. அதற்கு மூன்று நிபந்தனைகளையும் விதித்தது.

அந்த நிபந்தனைகளில் அடிக்கடி சிறு சிறு மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

நீதி. அரசியல் விவகார அமைச்சரும், நீதித்துறைக்குப் பொறுப்பான பிரதி அமைச்சருமான ஜீ. எல்.பீரிசும், மின்சக்தி அமைச்சரும் பிரதிப்பாதுகாப்பு அமைச்சருமான அனுருத்த ரத்வத்தை

(5ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள பேப்பர் கட்டிங் மெசின் Madein Londan உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: றோக் யோசப், இல. 123, சென் பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம் (43530)

இறைச்சிக் கோழிகள் (Broiler) மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: Red Rose Farm, ந. குணராஜ், கே. கே. எஸ் வீதி, வல்வெட்டித்துறை. (சி-3473)

யன்மார் டீசல் இயந்திரம் கொண்ட 2000 W வலுவுள்ள மின்பிறப்பாக்கி விற்பனைக்கு உண்டு பார்வையிடும் நேரம்: காலை 8.00-11.00 வரை. முகாமையாளர், திருநீலகண்ட வென்னை மாவடிப் பிள்ளையார் கோவில், மீசாலை. (43520)

நல்ல நிலையில் உள்ள ரயர் வண்டில், Singer குளிர்சாதனப் பெட்டி ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி வி சந்திரமதி 27/20, புங்கங்குளம் வீதி, யாழ்ப்பாணம். (43496)

வீட்டுத் தளபாடங்கள் Yamaha, Mate 90 Model மோட்டார் சைக்கிள் (மண்ணெண்ணெய்க்கு மாற்றப்படாதது) தேக்கு அலுமாரி, தேக்கு சாப்பாட்டு மேசை, கதிரைகள், சோக்கேஸ், மற்றும் வீட்டுப் பாவனைப் பொருள்கள் விற்பனைக்குண்டு. பார்வையிடும் நேரம்; பி. ப. 1.00 மணிக்கும் 5.00 மணிக்கும் இடையில் (பழைய நேரம்) முகவரி: மா. கந்தப்பு, 75 (109), அரசடி வீதி, யாழ்ப்பாணம். (8958)

நல்ல நிலையிலுள்ள 8 ஸ்ரீ தொடர் இலக்க மொறிஸ் ஒக்ஸ்போர்ட் கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க ஸ்ரீ சாரதா சேவாச்சிரமம், பருத்தித்துறை (43536)

### தவறிவிட்டது

வேம்படிச்சந்தி தொலைபேசி நிலையத்திற்கு அருகில் முக்கிய தகவல்கள் கொண்ட ஒரு தினக்குறிப்புப் புத்தகம் (Diary) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கஸ்தூரியார் வீதியிலுள்ள கலைவாணி நகை மாளிகையில் ஒப்படைக்கவும் — சிவமணிநாயகம் (8956)

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி ஈஸ்ரரின் நிஷானி ஜெயக்குமாரன் என்பவரின் இல 0906000248 விசேட அடையாள அட்டையும், இல. 002711 பாடசாலை அடையாள அட்டையும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம் ஐ பி ஜெயக்குமாரன் 29, ஆசிர்வாதம் லேன், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (43541)

### சோதிடம்

பரீட்சையில் சித்திஉண்டா? தொழில் கிடைக்குமா? வெளியூர்ப்பிரயாணம் உண்டா? காதல் திருமணம் நன்மை தருமா? எதிர்கால வெற்றிகள் தோல்விகள் பற்றிய உங்கள் குறிப்பு பலன் ஆராய ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், இல:158, கோவில் வீதி, முடமாவடி, நல்லூர் யாழ்ப்பாணம். (43497)

---

ஓம்
யாழ்ப்பாணம் வண்ணை

## ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

**16 - 12 - 96 — 13 - 1 - 97** வரை
மார்கழி திருப்பாவைப் பூஜை

இப்பூஜைகளில் முன்னர் பங்குபற்றியவர்களும், பங்குபற்ற விரும்புபவர்களும் தேவஸ்தானக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(43532) — ஆதீன மகாசபை

---

## வடமாகாண ஆசிரியர் சகாய நிதிச் சங்க
(153, காங்கேசன்துறை வீதி, கொக்குவில்.)

### அழைப்பு

★ 62–வது வருடாந்தப் பொதுக்கூட்டம்.
★ வைரவிழா மலர் வெளியீடு.
★ பாராட்டு விழா.

உப தலைவர் திரு. சே. சிவராஜா
செயலாளர் திரு. வி. ஸ்ரீசக்திவேல்
ஆகியோர் பாராட்டப்படுவர்

காலம்: **09 – 11 – 96** சனிக்கிழமை
மு. ப. 10 30 மணி

இடம்: வைத்தீஸ்வராக் கல்லூரி. மண்டபம்.

(இடப்பெயர்வு காரணமாகத் தற்போதைய முகவரி பெற முடியாத நிலையில், அங்கத்தவர்களை இவ் அழைப்பினை ஏற்று, தவறாது வருகை தருமாறு அழைக்கின்றோம்.)

சு ஜெயராஜன் தலைவர்
விழாக்குழுவினரும், நிர்வாக சபையும்.

(43529)

---

"உண்மையே உயர் அறம்"

## ஸ்கந்தா பழைய மாணவர் சங்கம் (O.S.A)

அங்கத்தவர்களின் முக்கிய கவனத்துக்கு 17-11-96 இல் நடைபெற இருக்கும் ப. மா. ச. வி பொ. கூட்டத்துக்கு, 4-11-96 உதயன் பத்திரிகை மூலம் அதிபர் அன்புடன் எங்களை அழைத்துள்ளார். இது விடயமாக 1996 ஒக்டோபர் மாதம் 8ஆம், 18ஆம், 27ஆம் திகதிகளில் உதயன் பத்திரிகையில் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. தயவுசெய்து இவற்றை கவனத்தில் கொண்டு தங்களது கருத்துக்களை கூட்டத்துக்கு முன்பே செயலாளருக்கு தெரிவித்தால் நல்லது. சந்தர்ப்பம் சூழ்நிலைகள் காரணமாக கூட்டத்துக்கு சமுகம் அளிக்க இயலாதவர்கள் 17-11-96-க்கு முன்பதாக எழுத்து மூலம் செயலாளருக்கு கருத்துக்களை அறியத்தரவும். மேலதிக விவரங்களுக்கு செயலாளருடன் தொடர்பு கொள்ளவும். தயவுசெய்து ஏனைய அங்கத்தவர்களுக்கும் அறியத்தரவும்

நன்றி.

சேது விபுலானந்தா,
செயலாளர்.

தில்லை கட்டி வீதி,
சுன்னாகம். (சி-3474)

---

யா/ அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்

## வருடாந்த பரிசளிப்பு விழா - 1996

இடம்:- வித்தியாலய மண்டபம்
காலம்:- 08 - 11 - 1996 வெள்ளி மு. ப. 9-30 மணி (பழைய நேரம்)
தலைவர்.- திரு ச. கைலாசநாதன் (பாடசாலை அதிபர்)
முதன்மை விருந்தினர்:- திரு. தி. சுதந்திரபாலன் (கணக்காளர், கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம்.)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
விழாக்குழு

அன்பளிப்பு,
ஆங்கில மருந்துகள் விற்பனையில் பல வருட முன்னோடி
கே. பீ. [illegible]
MEDILAND
பிரதான வீதி, சங்கானை. (43519)

---

## வங்கிக் கணக்கை ஒய்வூதியர் மாற்றத் தேவை இல்லை

யாழ்ப்பாணம், நவ. 7

ஒய்வூதியப் பணிகள் பன்முகப்படுத்தப்படுவதற்காக ஒய்வூதியர்கள் தமது வங்கிக் கணக்குகளை மாற்ற வேண்டும் என்று வற்புறுத்த வேண்டாம் என்று யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன் பிரதேசச் செயலர்களுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

வடமாநில ஒய்வூதியர் சங்கங்களின் சம்மேளனத் தலைவருக்கு அரச அதிபர் அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் இதைத் தெரிவித்துள்ளார்.

ஒய்வூதியர்கள் தாம் வாழும் பகுதி வங்கியில் வங்கிக் கணக்கை ஆரம்பிக்குமாறு கோரப்படுவதை மாற்றுமாறு அரச அதிபருக்கு சம்மேளனம் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தது. (இ-3)

---

## OLD BOYS' ASSOCIATION ST. PATRICKS' COLLEGE
## REQUIEM MASS

For the deceased members of the Patrician community.—

Will be offeried at St. Mary's Cathedral at 8.30 a.m (newtime) on 08 - 11 - 96 Friday.

P. Benedict
Secretary.

59, st. Patrick's Road,
Jaffna

(43544)

---

## G.A.Q. 97, 98 (பேராதனை)

★ மேற்கூறப்பட்ட பயிற்சி நெறிக்கு பல்கலைக்கழகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
★ A/Lல் 180 புள்ளிகள் பெற்றவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.
★ இதற்குரிய பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.

விரிவுரைகள் ஆரம்பம்: **16 – 11 – 96**
10.00 மணி

விவரங்களுக்கு:
S. அருள்நங்கை,

### புதிய உயர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(43538)

---

100 ஆவது நாள்

## நினைவலைகள்



மலர்வு: 1924 — 08 — 15
மறைவு; 1996 — 07 — 29

அமரர்

### ஆறுமுகம் விஜயரத்தினம்
(சோதிடர்)
(நீலிப்பழந்தை, வதிரி - கரவெட்டி)

1996-07-29 அன்று இராமநாதபுரம் கிளிநொச்சியில் எங்கள் தந்தையார் அவர்கள் அவரது இல்லத்தில் இயற்கை எய்தினார் என்பதை அறியத்தருகின்றோம்.

எங்கள் தந்தை சுகவீனமுற்று வாழ்ந்த 24 நாள்களிலும் அவருக்கு உதவிகள் புரிந்தவர்களுக்கும், பின்னர் அவர் இறைபதம் எய்திய போது இறுதிக் கிரியைகளில் கலந்தும், அந்தியேட்டி வைபவத்தின் போதும் கலந்து கொண்டு உதவிய வன்னிவாழ் நண்பர்கள், உறவினர்கள், ஆசிரிய அன்பர்களுக்கும், மற்றும் சுகுணா மாமா (சுகுணா ரெக்ஸ்) கமல் ஆகியோர்க்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகள்.

மேலும் இத் துயரச் செய்தி கேட்டு எமது இல்லம் ஏகி ஆறுதல் கூறிய அன்பு உள்ளங்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பி வைத்தவர்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பில் ஆழ்ந்த நன்றிகள்.

உங்கள் பிரிவால் என்றும் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், வி. குலவரதராசா (கிளாக்), வி. கனகராசா (ஆசிரியர்), வி. ஸ்ரசலோஜினா (ஆசிரியை), வி. தர்மகுலசோதி (லண்டன்), வி. விஜயலட்சுமி, வி. ஜெயலட்சுமி.

எழுதுமட்டுவாழ். (43454)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்

## நோயாளர் கப்பல்சேவை

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்து நோயாளர்களைக் கொழும்புக்கு ஏற்றிச் செல்லும் சேவையை விரிவுபடுத்துவதற்கு, செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு முடிவு செய்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

இந்த முடிவு வரவேற்கப்பட வேண்டியதாகும். அதன் பொருட்டு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுக்கு யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் நன்றியும் தெரிவிப்பர்.

யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட சூரியப்பிரகாசம் இராணுவ நடவடிக்கைக்கு முன்னர், யாழ். நோயாளர்களுக்கென செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு விசேட கப்பல் சேவையை நடத்தி வந்தது.

அதன் விளைவாக யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற முடியாத பல நூற்றுக்கணக்கான நோயாளர்கள் கொழும்பு சென்று தமது பிணிகளைத் தீர்த்துக் கொள்ள அரும் வாய்ப்புக் கிடைத்தது. அதற்காக சம்பந்தப்பட்ட நோயாளர்கள் செஞ்சிலுவைக் குழுவுக்கு என்றென்றும் நன்றி உடையவர்களாக விளங்குவர்.

காங்கேசன் துறைமுகத்தில் தரித்து நின்ற செஞ்சிலுவைக் குழுவின் கப்பல் ஒன்று தாக்கிச் சேதமாக்கப்பட்ட பின்னர் கூட, அக்குழு தனது மனித நேயப்பணியைத் தொடர்வதற்குப் பின்னுக்கு நின்றதில்லை. யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மந்திகையில் இயங்கிய போதும் செஞ்சிலுவைக் குழு நோயாளர் கப்பல் சேவையைத் தொடர்ந்து நடத்தியது.

இவ்வருடம் ஏப்ரல் பிற்பகுதியில் வலிகாமம் மக்கள் மீளக் குடியமர்ந்து, யாழ். ஆஸ்பத்திரி இங்கு இயங்கத் தொடங்கிய ஒரு சில மாதங்களுக்கு அரசாங்க சார்பில் நோயாளர் விமான சேவை நடத்தப்பட்டது ஆனால் அதிக எண்ணிக்கையான நோயாளர்களைக் கொண்டு செல்ல முடியவில்லை.

அதனால்—

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு யாழ்ப்பாண நோயாளருக்கு உதவும் பொருட்டு மீண்டும் தனது சேவையைக் கடந்த செப்ரெம்பரில் ஆரம்பித்தது. வாரத்தில் ஒரு நாள் இந்தச் சேவை மிக ஒழுங்காக நடைபெறுகிறது.

நோயாளர் கப்பல் சேவையை விரிவுபடுத்துவது என்றமுடிவுநோயாளர்களுக்கு மேலும் வசதி செய்வதாக அமையும் என்பதில் ஐயமில்லை.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பணி ஆணையில் போரினால் பாதிக்கப்படும் மக்களுக்கு மனிதாபிமான உதவிகளைச் செய்வதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் அக்குழு கடந்த ஆறு வருடங்களாக தனது வரம்புக்கு உட்பட்ட அளவில் யாழ். மக்களுக்குப் பலஉதவிகளைச் செய்து வருகிறது.

அதன் மனித நேயப் பணிகள் எவ்வித இடையூறுமின்றித் தொடர வேண்டும் என்பது இப்பகுதி மக்களின் பெரு விருப்பமாகும்.

செஞ்சிலுவைக் குழுவைத் தெற்கில் சில தரப்பினர் காலத்துக்குக் காலம் பல்வேறு விதமாக விமர்சித்த போதிலும் அதன் பணி எவ்வித தளம்பலும் இன்றி அதற்கே உரிய நேரிய வழியிலும் நடைபெறுகின்றது. குடாநாட்டு மக்களுக்கு அது ஆற்றிவரும் பணி அதற்கு நற்சான்றாகும்.

# மாவட்டத் திட்டமிடல் அலகுகள் செயலகங்களாகத் தரம் உயரும்

யாழ்ப்பாணம், நவ. 7

மாவட்டங்கள் தோறும் இயங்கும் திட்டமிடல் அலகுகள் மாவட்ட திட்டமிடல் செயலகங்களாகத் தரமுயர்த்தப்பட உள்ளன.

ஜனாதிபதியின் வழிகாட்டுதலின் பிரகாரம் மாவட்டத் திட்டமிடல் அலகுகளை மாவட்டதிட்டமிடும் செயலகங்களாகத் தரமுயர்த்த நடவடிக்கை எடுக்குமாறு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு 24-10-96 ஆம் திகதிய சுற்றறிக்கையில் சகல அரசாங்க அதிபர்களையும் கேட்டுள்ளது.

திட்டமிடல் அமைச்சின் மாவட்ட திட்டமிடல் அலகுகள் கடந்த கால் நூற்றாண்டாக இயங்கி மாவட்ட அபிவிருத்தியில் தாக்கமான பங்களிப்பைச் செய்துள்ளன.

அவற்றின் முக்கியத்துவம் அடையாளம் காணப்பட்டு விரிவான சேவைகளைச் செய்யும் வகையிலேயே அவை மாவட்ட திட்டமிடல் செயலகங்களாக ஜனாதிபதியால் தரமுயர்த்தப்பட உள்ளன.

மாவட்ட அரச அதிபரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் வரும் மாவட்ட திட்டமிடல் செயலகங்கள் மாவட்ட மட்ட இணைப்புப்பணியினை பலப்படுத்துவதுடன் மாவட்ட அபிவிருத்தித்திட்டமிடல் செயற்படுத்தல் பணிகளை இணைத்து முன்னேற்றங்களை நெறிப்படுத்தும், சகல அபிவிருத்தி முயற்சிகளும் மாவட்ட திட்டமிடல் செயலகங்களின் அவதானத்தைப் பெறும்.

தேசிய ரீதியாக அமைக்கப்படும் மாவட்ட திட்டமிடல் செயலகங்களில் ஒன்று விரைவில் யாழ். மாவட்டச் செயலகத்தில் அரச அதிபர் செ. பத்மநாதனால் அங்குரார்ப்பணம் செய்யப்படவிருப்பதாக திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் செ சுவாமிநாதன் தெரிவித்தார்.

(இ-3)

## ஜனாதிபதியைப் பாதுகாக்க விசேட 'பட்டாலியன்'

கொழும்பு, நவ. 7

ஜனாதிபதிக்கு பாதுகாப்பு வழங்குவதற்கென நிரந்தரமாக விசேட இராணுவ பட்டாலியன் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இப்பட்டாலியனில் 840 அதிகாரிகளும் துருப்புக்களும் உள்ளனர்.

இப்பட்டாலியனுக்குப் பொறுப்பாக பிரிகேடியர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்தப் பிரிகேடியரின் பெயரை வெளியிட விரும்பவில்லை என்று தஐலண்ட் நாளிதழ் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி படையணி என்று ஏன் உருவாக்கப்பட வேண்டும் எனக் கேட்ட போது, ஜனாதிபதிக்கு பாதுகாப்பு வழங்கும் படையணியிலிருந்து அடிக்கடி வீரர்களைத் திரும்பப்பெறுவது இடம்பெறுவதைத் தவிர்ப்பதே நிரந்தரப்படை அமைக்கப்பட்டதன் நோக்கம் என்று இராணுவ அதிகாரி ஒருவர் கூறினார்.

இது தொடர்பாக ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவு ஒன்றை அமைக்கும் விசேட வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி செப்டம்பர் 4 இல் பிறப்பித்தார்.

இராணுவத்தைத் தவிர, பிரதிப் பொலீஸ் மா அதிபர் விக்டர் பெரெரா தலைமையில் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவும் ஜனாதிபதிக்குப் பாதுகாப்பளித்து வருகிறது. (150)

## 3 லீற்றர் மண்எண்ணெய் மட்டுமே

யாழ்ப்பாணம், நவ 7

போதிய மண்எண்ணெய் இடைக்காததால் யாழ். பிரதேச செயலகப் பிரிவிலும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் 3 லீற்றர் மண்எண்ணெயே வழங்கப்படவிருந்ததாக யாழ். பிரதேச செயலர் திரு. க. குணராசா தெரிவித்தார்.

4 லீற்றர் மண்எண்ணெய் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் —

போதிய மண்எண்ணெய் கிடைக்காததால் 3 லீற்றர் வழங்கப்படுவதாகவும் — அவர் தெரிவித்தார்.

(இ-3)

## நாளை

ஐப்பசி 23
வெள்ளிக்கிழமை
திதி: துவாதசி
முற்பகல் 9.46 வரை.
நட்சத்திரம்: அத்தம்
முன்இரவு 11:42 வரை.
பிரதோஷ விரதம்
ராகுகாலம்: 10.35-12.05
சுபநேரம்: 6.05 -7.35
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# அரசின் ஆட்சிக்காலம் முடியும்...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யும் அரசாங்கத்தின் நிபந்தனைகள் என்று கடைசியாக அறிவித்துள்ள நிபந்தனைகள் வருமாறு:

### புதியவை

1. தமிழீழ விடுதலைப் புலிகள் தம்மிடமுள்ள ஆயுதங்களைக்கையளிக்க வேண்டும்.

2. புனர்வாழ்வு புனரமைப்பு விஷயங்கள் மட்டும் என்று இல்லாமல் அரசியல் தீர்வு பற்றியும் பேச புலிகள் முன்வர வேண்டும்.

3. பேச்சுவார்த்தை நடந்து முடிவதற்குக் கால எல்லை நிர்ணயிக்கப்பட வேண்டும்.

சென்னையிலிருந்து வெளிவரும் 'புரொன்ட் லைன்' ஆங்கில இதழுக்கு ஜனாதிபதி அளித்த பேட்டியில் மூன்றாந்தரப்பு ஒன்றின் மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதாயின் புலிகளின் ஆயுதக் கையளிப்பு இல்லாமலும் அது நடைபெறலாம் என்று தெரிவித்திருந்தார்.

ஆனால் அமைச்சர்கள் பீரிஸும், அனுருத்த ரத்வத்தையும் மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதானாலும் புலிகள் ஆயுதங்களைக் கையளிக்க வேண்டும் என்று உரத்த குரலில் கூறி வருகிறார்கள்.

இந்த நிபந்தனையை ஏற்று புலிகள் பேச்சுவார்த்தைக்கு வருவார்கள் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறதா? இல்லை.

புலிகள் பேச்சுவார்த்தைக்கு வராமல் விடுவதில் அரசுக்கு இலாபம் தான்.

### அனுகூலங்கள்

பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று அறிவித்ததன் மூலம் அரசாங்கம் சர்வதேச சமுதாயத்தின் நன்மதிப்பைப் பெறக்கூடியதாக இருந்தது. உதவி வழங்கும் நாடுகளையும் உலக நிதி நிறுவனங்களையும் திருப்திப்படுத்தக் கூடியதாகவும் இருந்தது. ஜனாதிபதியின் "இமேஜும்" வெளி உலகில் உயர்ந்தது.

அரசாங்கம் அழைத்தும் புலிகள் பேச்சுவார்த்தைக்கு வருகிறார்கள் இல்லையே என்று வெளி உலகிற்குக் காட்டினால் அரசின் நிலை இன்னுமொருபடி உயரும் அல்லவா?

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதும், தீர்வை வடக்கு கிழக்கில் நடைமுறைப்படுத்துவதும் வெவ்வேறு விஷயங்கள்.

### வெவ்வேறு விஷயங்கள்

தீர்வை நடைமுறைப்படுத்துவதற்குத்தான் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்புத் தேவை.

ஆனால் புலிகளின் பங்களிப்பு இல்லாமலே அரசாங்கம் விரும்பினால் தீர்வு காண வழி உண்டு.

புலிகள் தவிர்ந்த மற்றத் தமிழ்க் கட்சிகள் இருக்கவே இருக்கின்றன. அவற்றுடன் பேசி தீர்வு காணலாம்.

அந்த வகையில் தீர்வு ஏற்பட்டு விட்ட பின்னர், அதைத் தமிழ் மக்களிடம் எடுத்துக் கூறி அவர்களின் ஆதரவைப் பெறலாம். அப்படியான ஒரு நிலை ஏற்படும் போது தீர்வுத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதைப் புலிகளால் தடுத்து நிறுத்த முடியாது போகும்.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களே ஒத்துக் கொண்ட தீர்வைப் புலிகளால் தூக்கி எறிய முடியாது. ஒன்றில் அவர்களும் தீர்வை ஏற்றுக் கொள்ள வேண்டும்; அல்லது நடப்பது நடக்கட்டும் என்று ஒதுங்கியிருக்க வேண்டும்.

தமிழ் மக்களுக்கு எதிரான காரியத்தில் புலிகள் ஈடுபட்டால் அவர்களைத் தமிழ் மக்கள் ஓரங்கட்டி விடுவார்கள்.

### ஐ.தே. கவும் ஏற்கும்

தீர்வுத் திட்டத்தைத் தமிழ்க்கட்சிகள் ஏற்றுக் கொள்கின்றன. தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். திட்டத்துக்கு புலிகளும் எதிர்ப்பு இல்லை என்ற நிலை ஏற்படுமானால் ஐக்கிய தேசியக் கட்சியும் தீர்வுத் திட்டத்தை ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும். அதற்கு வேறு வழியில்லை.

தமிழ் மக்களைப் பகைத்துக் கொண்டால் ஐ.தே.கவுக்கு அடுத்த பொதுத் தேர்தலில் ஆட்சிப்பீடம் ஏறும் வாய்ப்புக் குறைந்துவிடும்.

இப்படி புளொட் தலைவர் சித்தார்த்தன் எம்பியும் மற்றும் பலரும் அரசாங்கத்துக்கு எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

அதை அரசாங்கம் கவனத்தில் கொண்டதாகத் தெரியவில்லை.

### அரசு விரும்பினால்

உண்மையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்று அரசாங்கம் விரும்பினால் தம் இலட்சியத்திலிருந்து விடுபட்டு, தனி நாட்டுக்கான ஆயுதப் போராட்டத்தையும் கைவிட்டு, ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் கலந்து பொதுத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று நாடாளுமன்றம் வந்து. அரசாங்கத்துக்கு அன்றிலிருந்து இன்று வரை ஆதரவு அளித்து வரும் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுடனும் மற்றும் அவர்களுடன் சேர்ந்து பணியாற்றிவரும் தமிழ்த் தலைவர்களுடனும் அரசாங்கம் முழு அளவில் பேச்சுவார்த்தை நடத்தலாம் அல்லவா?

அதைக் கூட அரசாங்கம் செய்யவில்லை.

தப்பித் தவறிப் புலிகளோடு பேசினாலும் இணக்கம் காண முடியாது மற்ற தமிழ்க்கட்சியினருடன் பேசினால் தீர்வு எட்டப்பட்டு விடலாம் என்று அரசு அஞ்சுகிறதா?

### ரணில் கூறியது

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறிவருவது போல இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் அரசுக்கு அக்கறை இல்லை. இந்த விஷயத்தில் அரசு நேர்மையாகச் செயற்படவில்லை. வெறுமனே நாடகமாடுகிறது என்று அரசியல் விமர்சகர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

இனப்பிரச்சினையோடு நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பும் பின்னிப் பிணைக்கப்பட்டிருக்கிறது. அதனால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பட்சத்தில் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதிப் பதவியும் போய்விம். ருசி கண்டவர்கள் அந்தப் பதவியை இழக்கத் தயாராக இல்லை.

அதை வெளியில் சொல்லவும் விருப்பமில்லை.

### இழுத்தடிப்பு தொடரும்

எனவே இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் மறைமுகமாக இழுத்தடிக்கப் பட்டுக் கொண்டு வருகிறது.

இந்த அரசின் ஆட்சிக் காலம் முடியும் வரை இழுத்தடிப்பு தொடரலாம்.

நாடாளுமன்றத்தில் கையை உயர்த்தி அரசுக்கு ஆதரவு அளித்துவரும் தமிழ்க் கட்சியினரின் ஆதரவைத் தக்க வைத்துக் கொள்வதற்கு அவர்களுக்கு என்ன சொல்ல வேண்டுமோ அது சொல்லப் படும். குறைந்த பட்சம் என்ன செய்யவேண்டுமோ அது செய்யப்படும்.

அதே வேளை சர்வதேச அரங்கில் சம்பாதித்துள்ள நல்ல பெயரைக் கெடுக்காமல் இருப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

.வடக்கு கிழக்கில் புலிகளுடன் சண்டையைத் தொடர்ந்து நடத்தி, ஏனைய பகுதி மக்களின் கவனம் அதில் திருப்பிவிடப்படும். அதன் மூலம் அந்த மக்கள் வாழ்க்கைச் செலவு உயர்வால் தாம் அனுபவித்துவரும் கஷ்டங்களை மறந்து விடுவார்கள். தொல்லை இல்லை.

சண்டையில் அவ்வப்போது ஏதாவது வெற்றி கிடைத்தால் கொடி ஏற்றி வெற்றி விழா நடத்தி மக்களில் ஒரு சாராருக்கு குதூகலத்தை ஏற்படுத்தலாம்.

இப்படியான சிந்தனையில் இருந்தால் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படுமா?

உயிர் இழப்பும், பொருள் அழிவும் பெரும் பணச் செலவுந்தான் தொடர்கதையாக இருக்கும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவினதும் இஸ்ரேலினதும் பயிற்சிக் களமாக வட மாகாணம்

## ஈ. என். டி. எல். எவ். தெரிவிப்பு

கொழும்பு, நவ. 7

அமெரிக்கா, இஸ்ரேல், ஸ்ரீலங்கா ஆகிய மூன்று நாடுகளின் பயிற்சிக் களமாக இலங்கையின் வட மாகாணம் மாறிவிட்டது. தமிழக மக்களும் இந்திய அரசும் இதனைக் கண்டித்துத் தடுத்து நிறுத்த வேண்டும்.

இவ்வாறு ஈ. என். டி. எல். எவ் இயக்கத்தின் பொதுச் செயலாளர் ஜி. ஞானசேகரன் கோரியுள்ளார்.

தமிழ் மக்களின் சுதந்திரம், அடிப்படை உரிமை போன்றவற்றை வேரோடு அழித்து விட அமெரிக்காவையும் இஸ்ரேலையும் அரசாங்கம் துணைக்கு இழுத்துள்ளது.

பயங்கரவாதத்தை எதிர்ப்பதாக அறிவித்து கிளிநொச்சி, முல்லைத்தீவு காடுகளில் அகதிகளாகத் தங்கியிருக்கும் தமிழர்கள் மீது தினமும் விமானத் தாக்குதல் நடத்த படையினர் பயிற்சி எடுக்கின்றனர்.

3 லட்சம் மக்கள் அக்கராயன் குளம், மல்லாவி, துணுக்காய், ஸ்கந்தபுரம் பகுதிகளில் மரங்களின் கீழ் துணிகளைக் கொண்டு மறைத்துத் தங்கியிருக்கின்றனர்.

குடிப்பதற்குக்கூட தண்ணீர் இல்லாமல் அவதிப்படும் மக்கள் மீது குண்டு வீச்சு நடத்தப்படுகிறது.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (இ-150)

# ரஜினியின் தந்தைக்கு அனுதாபம் தெரிவித்து ஜானக பெரேரா கடிதம்

உரும்பிராய், நவ. 7

நானும் ஒரு தந்தை என்ற வகையில் தங்களின் மன வேதனையையும் துன்பத்தையும் என்னால் உணர முடிகிறது. அந்த வேதனையையும் துன்பத்தையும் எந்த ஓர் ஆறுதல் வார்த்தையும் குறைத்து விடாது என்பதனையும் நான் அறிவேன்.

இவ்வாறு 51 ஆவது படையணியின் தளபதி மேஜர்ஜெனரல் ஜானக பெரேரா, படுகொலை செய்யப்பட்ட ரஜினியின் தந்தை வேலாயுத பிள்ளைக்கு எழுதிய கடிதத்தில் அனுதாபம் தெரிவித்திருக்கிறார்.

கடந்த மாதம் 16 ஆம் திகதி எழுதப்பட்ட அந்தக் கடிதத்தில் மேஜர் ஜெனரல் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

தங்களது 4-10-96 ஆம் திகதிய கடிதம் தொடர்பாக—

சம்பவம் தொடர்பாக கேள்விப்பட்ட உடனேயே இந்த தலைமையகம் நடவடிக்கையை மேற்கொள்ள ஆரம்பித்தது.

காணாமற்போன தங்களது மகளின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது என்பதை ஆழ்ந்த மனவேதனையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். 6 சிப்பாய்கள் கைதுசெய்யப்பட்டு பொலீஸாரிடம் கையளிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் யாழ்ப்பாணம் நீதிவான் முன்னிலையில் பொலீஸாரால் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நானும் ஒரு தந்தை என்ற வகையில் தங்களின் வேதனையையும் துன்பத்தையும் என்னால் உணர முடிகிறது. அந்த வேதனையையும் துன்பத்தையும் எந்த ஓர் ஆறுதல் வார்த்தையும் குறைத்துவிடாது என்பதையும் நான் அறிவேன்.

இவ்வாறான குற்றமிழைத்தவர்களுக்கு ஆகக் கூடிய தண்டனை வழங்கப்படுவதற்கும் நீதி நிலைநாட்டப்படுவதற்கும் என்னாலான முயற்சிகள் அனைத்தையும் மேற்கொள்வேன் என உறுதியளிக்கிறேன்.

இவ்வாறான வேதனைகளும் துன்பங்களும் ஏனைய பெற்றோருக்கும் ஏற்படாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு நான் ஏற்கனவே தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளேன் — என்று உள்ளது.

இந்தக் கடிதத்தின் பிரதி அமைதிக்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுவின் தலைவருக்கும் அனுப்பப்பட்டிருந்தது. (அ-10-154)

## காரைநகர் ஆஸ்பத்திரிக்கு மின் பிறப்பாக்கி

ஊர்காவற்றுறை நவ. 7

காரைநகரில் உள்ள அரசினர் ஆஸ்பத்திரிக்கு புதிதாக மின் பிறப்பாக்கி (ஜெனரேட்டர்) ஒன்று கிடைக்க உள்ளது.

இந்த வைத்தியசாலையின் நீண்ட நாள் தேவைகளில் ஒன்றான மின்பிறப்பாக்கியை கொள்வனவு செய்வதற்கான நிதியை, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. இராமேஸ்வரன் தமது பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து ஒதுக்கியுள்ளார்.

அந்த நிதியைக் கொண்டு மிக விரைவில் மின்பிறப்பாக்கி கொள்வனவு செய்யப்பட இருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

## நோயாளருடன் ஜாவாகோல்ட் புறப்பாடு

யாழ்ப்பாணம், நவ. 7

கொழும்பு செல்லும் நோயாளர்களை ஏற்றிக்கொண்டு ''ஜாவாகோல்ட்'' கப்பல் நேற்று மாலை திருகோணமலை நோக்கிப் புறப்பட்டது.

யாழ். ஆஸ்பத்திரியில் இருந்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் உதவியுடன், இந்நோயாளர், செஞ்சிலுவைச் சங்க வாகனங்களில் கப்பலுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (இ-15)

## சோதனைச் சாவடியில் குண்டு வெடிப்பு

மட்டக்களப்பு — திருமலை வீதியில் உள்ள பொலீஸ் சோதனைச்சாவடியில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை காலை 8 45 மணியளவில் குண்டு ஒன்று வெடித்தது.

இச்சம்பவத்தால் நகரில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. (இ-3)

# குடாநாட்டில் காய்ச்சல் தீவிரமாகப் பரவுகிறது

யாழ்ப்பாணம், நவ. 7

யாழ் குடாநாட்டில் மலேரியா, நெருப்புக் காய்ச்சல் தீவிரமடைந்து வருவது யாழ். போதனா வைத்தியசாலைப் பதிவேடுகளில் இருந்து தெரிய வருகிறது.

தீவிரமடைந்துவரும் இந்த நோய்களை முற்றாகக் குணப்படுத்த முடியாதுள்ளதாகவும்—

திரும்பத் திரும்ப இந்நோய்கள் தாக்கி வருவதாகவும்—

இதனால் நோயாளர் இறப்பைச் சந்திக்க வேண்டியுள்ளதாகவும்— ஆஸ்பத்திரி வட்டாரங்களில் கவலை தெரிவிக்கப்படுகிறது.

நோயை பூரணமாக மாற்ற முடியாது இருப்பதற்கு மருந்துத் தட்டுப்பாடும் ஒரு காரணம் என்று கூறப்படுகிறது.

காய்ச்சலால் அதிகமாக சிறுபிள்ளைகளே பாதிக்கப்படுகின்றனர்

யாழ். போதனா வைத்தியசாலையில் காய்ச்சலால் அனுமதிக்கப்பட்டிருக்கும் சுமார் 75 பேரில் 40 பேர் சிறு பிள்ளைகளாவர்.

நேற்றும், நேற்று முன்தினமும் காய்ச்சல் காரணமாக மூன்று சிறு குழந்தைகள் உயிரிழந்துள்ளன.

யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டிருந்த இளவாலையைச் சேர்ந்த சின்னத்தம்பி தயாசீலன் (வயது 4), நாவற்குழியைச் சேர்ந்த நகுலேஸ்வரன் சங்கீதா (வயது 11 மாதம்) ஆகிய இரு குழந்தைகளும் நேற்று முன்தினம் மரணம் அடைந்தனர்.

மூன்று நாள் காய்ச்சல் என யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்படும்போது வழியில் இறந்ததாக தியாகராசா பிரமீளா (வயது 9 மாதம் — குரும்பசிட்டியில் இருந்து இடம்பெயர்ந்து இணுவிலில் வசித்தவர்) என்ற குழந்தையின் சடலமும் நேற்று யாழ் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது. (இ-15)

## புலிகளோடு–

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிடையே கருத்திணக்கம் உருவாகியுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்;-

★ இலங்கையில் நடக்கும் ஆயுதப் போராட்டத்தை நிறுத்துவதற்கு சகலவித முயற்சிகளும் எடுக்கப்படுவதோடு இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வே காணப்பட வேண்டும்.

★ அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான பேச்சுவார்த்தையில் தமிழீழ விடுதலைப் புலிகளும் சேர்க்கப்பட வேண்டும்.

★ அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் உறவை உண்டாக்க மூன்றாம் தரப்பான தொடர்பாளர் தேவை.

பிரஸ்தாப மூன்றாம் தரப்பு இலங்கைக்குள் இருக்கலாம் அல்லது நாட்டுக்கு வெளியேயுள்ள எவரும் அல்லது ஓர் அமைப்பாகவும் இருக்கலாம்

★ நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளும் குழுவின் நடவடிக்கைகளில் தீவிரமாகப் பங்குபற்ற வேண்டும்.

இந்தத் தீர்மானங்களின் அடிப்படையில் இனப்பிரச்சினைத் தீர்க்கும் முயற்சிகளை முன்னெடுக்க அரசியல் கட்சிகளின் தலைமைப் பீடங்களுக்குச் சிபார்சு செய்யப்பட்டுள்ளதாக அறிய வருகிறது.



## ஸ்ரீலங்கா - நியூசிலாந்து இன்று சாஜாவில் மோதும்

ஸ்ரீலங்கா, பாகிஸ்தான், நியூசிலாந்து ஆகிய நாடுகள் பங்குபற்றும் ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடர் இன்று சாஜாவில் ஆரம்பமாகிறது.

இன்றைய போட்டியில் ஸ்ரீலங்கா, நியூசிலாந்து அணிகள் மோதும்.

ஒவ்வொரு அணியும் எதிர் அணிகளுடன் இரு முறைகள் எதிர்த்து விளையாடும்.

இத் தொடரின் இறுதிப் போட்டி இம் மாதம் 15 ஆம் திகதி சாஜாவில் நடைபெறும். (இ-10)

# ரைட்டன் கிண்ணம் இந்தியா வென்றது

தென் ஆபிரிக்கா, ஆஸ்திரேலியா, இந்தியா ஆகிய மூன்று நாடுகள் கலந்து கொண்ட ரைட்டன் கிண்ணத்துக்கான ஒரு நாள் கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் தென் ஆபிரிக்காவை இந்தியா 35 ஓட்டங்களால் வெற்றிபெற்றது

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 7 விக்கெட்டுகளை இழந்து 220 ஓட்டங்களைப் பெற்றது. டெண்டுல்கார் 67 ஓட்டங்களைப் பெற்றார். மோசமான நிலையில் இருந்த இந்திய அணி அஜித் ஜடேஜா ஆட்டமிழக்காமல் எடுத்த 42 ஓட்டங்களால் ஒரு கௌரவமான நிலைக்கு வந்தது

பதிலளித்து ஆடிய தென் ஆபிரிக்க அணி மிக மோசமாக ஆடி 7 விக்கெட்டுகளை இழந்து 96 ஓட்டங்களைப் பெற்றபோதும் 8 ஆவது விக்கெட் இணையாக சிம்கொக், றிட்சாட்சன் ஜோடி தென் ஆபிரிக்காவுக்கு வெற்றியைத் தேட முயன்ற வேளையில் அனில் கும்பிளேயின் அபார பந்து வீச்சினால் அனைத்து விக்கெட்டுகளையும் 185 ஓட்டங்களுக்கு இழந்தது ஆட்ட நாயகனாக அனில் கும்பிளே தெரிவு செய்யப்பட்டார் (இ-10)

## தாமதமாக வந்து சேர்ந்த மருந்து வகைகள்

யாழ்ப்பாணம், நவ. 7

யாழ். போதனா வைத்தியசாலையின் பாவனைக்கான மருந்து வகைகள் நேற்று கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டன.

நடப்பு வருடத்தின் முடிவடைந்த மூன்றாம் கந்தாயத்துக்கான மருந்து வகைகளே தற்போது தாமதமாக எடுத்து வரப்பட்டுள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரத்தில் தெரிவிக்கப்பட்டது. (இ-15)

## ரூ. 1 லட்சம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோர் நீதிமன்றக் கூண்டில் ஏற்றப்பட்டு குற்றச் சாட்டுகள் வாசிக்கப்பட்டன.

சந்திரசுவாமி, அகர்வால் ஆகியோரின் பிணை மனுக்கள் உயர் நீதிமன்ற முடிவை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதால் இந்த வழக்கு விசாரணையை ஒத்திவைக்கும்படி ராவ் தரப்பில் வைக்கப்பட்ட கோரிக்கையை நீதிபதி நிராகரித்தார்.

### செண்கிட்ஸ் வழக்கு

அதேசமயம் செண்கிட்ஸ் போலி ஆவண வழக்கில் நரசிம்மராவின் பிணை மனு சம்பந்தமாக சீ. பி. ஐக்கு நோட்டீஸ் அனுப்பும்படி டில்லி உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

இந்த வழக்கில் ராவின் பிணை மனுவை டில்லி பெருநகர மஜிஸ்ரேட் பிறேம்குமார் நிராகரித்ததை அடுத்து, உயர் நீதிமன்றத்தில் ராவ் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனு மீது நீதிபதி எஸ். கே. மகஜன் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இந்த வழக்கு இன்று விசாரணைக்கு வருகிறது. (இ-4)

## கடவுச்சீட்டு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரம் ரூபாவாக ஒரே சீராக்கப்படும். அடுத்த ஆண்டு ஏப்பிரல் மாதத்திலிருந்து இது நடைமுறைக்கு வரும். ஆடம்பர வாகனத்துக்கான கட்டணத்தில் மாற்றமில்லை.

தபால் கட்டணம் 2 ரூபாவில் இருந்து 2 ரூபா 50 சதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு பற்றி ஆராய்ந்த குழுவினால் சிபார்சு செய்யப்பட்ட சம்பள அதிகரிப்பு தொகையில் 85 சதவீதம் வழங்கப்படும்.

புதிய சம்பள அதிகரிப்பு அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து இரண்டு கட்டங்களில் வழங்கப்படும்

அதாவது மொத்த சம்பள அதிகரிப்பில் 40 சதவீதம் அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்தும் —

எஞ்சிய 60 சதவீதம் 1998 ஜனவரி மாதத்தில் இருந்தும் — வழங்கப்படும்.

இதன்படி அனேகமான ஊழியர்கள் அடுத்த ஆண்டிலிருந்து 300 ரூபா சம்பள அதிகரிப்பைப் பெறுவார்கள்.

விடுமுறை தினங்களில் கடமையாற்றும் உயரதிகாரிகளுக்கு வழங்கப்படும் இருபதில் ஒரு பங்கு கொடுப்பனவு நீக்கப்பட்டுள்ளது. ஏதேனும் பதவி ஒன்றில் பதில் அடிப்படையில் கடமையாற்றுவதற்காக வழங்கப்படும் கொடுப்பனவு அந்தப் பதவியைப் பொறுத்து 50 சதவீதத்துக்கும் 25 சத வீதத்துக்கும் இடைப்பட்ட தொகையினால் குறைக்கப்படும்.

பதில் அடிப்படையில் பதவி வகிக்கும் காலமும் 3 மாதங்களாக மட்டுப்படுத்தப்படும்.

மேலதிக வேலைக் கொடுப்பனவு 20 மணித்தியாலங்களாக மட்டுப்படுத்தப்படும். இந்த நடவடிக்கைகள் மூலம் 100 கோடி ரூபாவை மீதப்படுத்தக் கூடியதாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

சுகாதாரத்துறை, தேசிய பாதுகாப்புத்துறை என்பன தவிர்ந்த ஏனைய துறைகளில் செல வீனங்கள் 20சத வீதம் குறைக்கப்படும்.

மோட்டார் வாகனக் கொள்வனவு சம்பந்தமாக அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. (இ-4)

மரண அறிவித்தல் 2 ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/[illegible] இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07-11-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org